
உ

சிவமயம்

# ஊரெழு மீனாட்சி திருஊஞ்சல்



இயற்றியவர்:

பண்டிதர் சங்கர குமரேசையா

வெளியீடு:

“கதிரமலை”

19 - 9 - 1992

உ

சிவமயம்

# ஊரெழு

# மீனாட்சி திருஊஞ்சல்

இயற்றியவர் :

## பண்டிதர் சங்கரகுமரேசையா

வெளியீடு :

## " கதிரமலை "

19 — 9 — 92

# பதிப்புரை

குழந்தைப் பருவம் அழகியது ; இனியது ; விரும்பப் படுவது ; கடவுளைக் குழந்தையாகக் கற்பித்து, ஊஞ்சல் ஆட்டுவது தமிழர் மரபு. பிள்ளைத் தமிழில் ஊஞ்சல் பருவம் மிக இனியது.

அருள்மிகு மீனாட்சித் தாயை ஊஞ்சலில் இட்டுத் தாலாட்டிப் பார்க்க விரும்பினோம் அவளே திருவருள் புரிந்தாள். இயற்கையாகவும் சர்வ சக்தியாகவும் நின்று அருள் பாலிக்கக்கூடிய தாயாள் எமக்கு முன் ஊஞ்சலில் காட்சி தருகிறாள். மனித வாழ்க்கை முறையை வாழ்ந்து காட்ட — ஜீவாத்துமாவைப் பரமாத்துமாவாக வளர்த்தெடுக்க, இறை தத்துவம் எமக்குப் பெருந்துணையாகிறது.

மதுரை மீனாட்சி, காஞ்சி காமாட்சி, காசி விசாலாட்சி என்று பல்லாயிரம் திருநாமங்களில் அழைக்கக் கூடிய தாயை எமதுகிராமமாகிய ஊரெழுவில் மீனாட்சியாகக் கண்டு - பாடிப் பணிந்து பரவத் திருவருள் பாலித்துள்ளாள். அவள் திருவருள் நோக்கின் ஒரு துளியே இச் சிறுநூல்.

அன்னை பெருமையைப் பாடி, எம்மைப்படிக்க வைத்துப் பக்தி வழிப்படுத்திய புலவர், யாழ். கரம்பன் 'சாத்வீகம்' பண்டிதர் சங்கர குமரேசையா அவர்களாவார். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் முந்திரிகைப்பருப்பாக முன்னே காட்டாதவர் இலைமறைகாய், கலைமாச்செல்வர் மாபெரும் மனிதப் பண்பாளர். அவர்கள் நாவால் தாய் பற்றிய சில அடிகள் சொல்லக்கிடைத்தமை நாம் செய்த தவம்.

இச்சிறு நூலை, கதிரமலை வெளியீடாக வெளிக்கொணர மீனாட்சித்தாய் அடியேனுக்கு அருள்புரிந்தாளே என்று எண்ண உள்ளம் பெருமகிழ்ச்சி அடைகிறது. நூலாசிரியர், அச்சாளர், உதவியோர் பாடிப்பரவுவார் யாவருக்கும் அன்னை அருள் பாலிப்பாளாக.

"கதிரமலை"

ஊரெழு யாழ்ப்பாணம் ச. கதிரவேலு

19 - 9 - 92

# யாழ்ப்பாணத்தைச் சார்ந்த
# ஊரெழு மேற்கு அந்திரானைப் பதி
# ஸ்ரீமீனாட்சி அம்பாள் ஊஞ்சல்

## காப்பு

மாணிக்கக் கூத்தன்செம் பாதி அம்மை
மரகதமா மணிக்கொழுந்து மலையான் மஞ்ஞை
பேணிக்கொல் பெருஞ்சக்தி ஊரெ ழுச்சேர்
போற்றுபதி அந்திரானை புகுந்து கற்பின்
மாணிக்கண் ணகையென்ன மாற்றங் கூறி
மன்னுமருள் மீனாட்சி ஊஞ்சல் பாட
ஆணிப்பொன் ஆனைமுகன் ஐங்க ரச்சேய்
அமலபதம் அஞ்சலித்தோம் அருள்வான் காப்பு

ஓங்காரி திரிசூலி உணர்வார் உள்ளம்
ஊறுந்தேன் மாரிபெரும் உவகை வெள்ளம் !
ஆங்காரந் தீர்மருந்தே அமிழ்த நீத்தம்
அபிராமி ஊரெழுவாழ் அஞ்சு கத்தாய்
தேங்கான வேதவொலி ரீங்கா ரத்தான்
தேவிதெய்வ மீனாட்சி ஊஞ்சல் பாடப்
பாங்கான பாமணிவெண் பங்க யத்தான்
பாரதிநா வரசிபதம் பணிவோம் காப்பு

## திருவூஞ்சல்

மாமறைகள் நான்குமணிக் கால்க ளாக
மன்னுமருள் ஆகமம்பொன் விட்ட மாகப்
பா மலர்ந்த திருமுறைகள் கலைபு ராணம்
பயிலுநவ ரத்னமணிக் கயிற தாகத்
தே மருவு கற்பகத்தின் திருப்பைம் பூவும்
திகழுமன்பர் உளச்செந்தா மரையும் கிட்ட
ஓ மெனுஞ்சீர்ப் பிரணவமாம பீடம் வீற்றே
ஊரெழுமீ ஞட்சியம்மை ஆடீர் ஊஞ்சல்!

எண்ணரிய உடுமணிகள் ஒவி யங்கள்
ஒளிர்நிலவு சேர்விசும்பாம் விதானம் ஒச்சிக்
கண்ணரிய காட்சிகொளக் கமலச் சேய்மால்
கவின்நிறைந்த அமிழ்தநிழற் குடைகள் தாங்கத்
தண்ணளிய சாமரைபூங் காற்றின் வேந்து
தானிரட்டக் கங்கையணி தலைவன் சேர்ந்தே
ஒண்ணலமார் நீலமணி உலக மாதா
ஊரெழுமீ ஞட்சியம்மை ஆடீர் ஊஞ்சல்!

பல்கதிர்ச்செம் பரிதிமிகப் பரந்த ஞானப்
பரிசொளிரும் மணித்தீபம் பரவத் தேவர்
மல்குகதிர்ப் பொன்னுலக மன்னன் கீர்த்தி
மலர்சுகந்த விரைசாலுந் தூபம் தூக்கச்
தொல்நிதியத் திருவளகைத் துரையாம் வேந்து
துளும்புசுவைத் திரவியஞ்சேர் அடப்பை ஏந்த
ஒல்லைவிரைந் தெமக்கருளும் உமையோம் சக்தி
ஊரெழுமீ ஞட்சியம்மை ஆடீர் ஊஞ்சல்!

தெய்வமலர்த் தண்ணளிபெய் திருப்பூம் பன்னீர்
    திரைகுலவும் புனலரசு தொழுதே தூவத்
துய்யமணி உரகம்பொன் ஆல வட்டம்
    தூக்கியுவந் தேபோற்ற நாத விந்தெம்
அய்யைதிரு வாழ்கெனவா லாத்தி யோம்ப
    அந்திரனைப் பதித்தேவி அஞ்ச னத்தாய்
உய்யவந்தெம் இருள்போக்கும் ஒளிவி ளக்கே
    ஊரெழுமீ னாட்சியம்மை ஆடீர் ஊஞ்சல்!

வெண்கமலக் கலையரசி வித்த கத்தி
    விமலைச்செங் கமலைதிரு விழுச்சீர் தேங்கும்
தண்ணியசெந் தமிழாலே வாழ்த்தி நிற்கத்
    தாவுமதி வெண்சங்கந் தலைக்கூட் டப்பேர்
தண்ணியதோர் கானமழை நல்லி யாழால்
    நாரதரே கூட்டிநிற்க, ஞாலந் துய்த்தே
உண்ணியமால் மகிழ்தங்கை உதய ஞானம்
    ஊரெழுமீ னாட்சியம்மை ஆடீர் ஊஞ்சல்!

ஆவிகுழைந் துள்ளூற அபர ஞான
    அமரவிசை கந்தருவர் இசைக்க நீலக்
காவிவிழி குழைபொருதிக் கருத்தை நல்கும்
    களிநடனம் அரம்பையர்கள் கனிவாய் ஆட
மேவிவளர் தூரியங்கள் கணங்கள் கூட்ட
    மேன்மையுயர் பொதியமுனி மதங்கம் சேர்க்க
ஓவியமே கண்ணுதலோன் உள்ளத் துள்ளீர்
    ஊரெழுமீ னாட்சியம்மை ஆடீர் ஊஞ்சல்!

கண்ணகையசய்த் திருநாமங் காட்டி வந்து
கற்றளியில் மீனாட்சி யென்னக் காட்சி
கொண்ணகையார் புரந்தரியைக் கூப்பி மந்த்ரம்
கூறிமறை யோர்தவத்தோர் ஞானி யோர்கள்
தண்ணலமென் தவிசிருத்தி வேள்வி நல்கத்
தாண்மலர்கள் மூவுலகும் தாழ்ந்தே போற்ற
ஒண்டொடியாய்! உயர் சிலம்பாய்! எம்மைக் காக்கும்
ஊரெழுமீ னாட்சியம்மை ஆடீர் ஊஞ்சல்!

வரந்தருஞ்சீர்ச் சிவகங்கை வான்சு கந்த
வகைப் பன்னீர் மஞ்சனநீர் வனப்பாய் ஆட்டித்
தரமுயர்ந்த நவமணிகள் குயிற்றித் தந்த
தங்கநிறப் பட்டணிந்து தகவார் பூண்கள்
விரவுமழ காயணிந்து நீறு சாந்தம்
வியனார்குங் குமந்தெரியல் விளங்கச் சாத்தி
உரகமணி சிவன்கூடி ஆடீர் ஊஞ்சல்!
ஊரெழுமீ னாட்சியம்மை ஆடீர் ஊஞ்சல்!

முழுவுலகும் போற்றுமணி மௌலி ஆட
முளரியொளிர் திருவதனம் ஆட ஆட
எழுமபய வரதகரம் எழிலாய் ஆட
இலங்குகரத் திரிசூல எழுச்சி ஆட
செழும்பொலனார் சிவனாடச் சேய்கள் ஆட
சேருமரி யோடிடபக் கொடியும் ஆட
ஒழுகுமழ கார்தேவி ஆடீர் ஊஞ்சல்!
ஊரெழுமீ னாட்சியம்மை ஆடீர் ஊஞ்சல்!

ஆதிசக்தி ஆரணியே அறிவே போற்றி
அரன்துணையே அருட்செல்வ அறமே போற்றி
சோதிவிளக் கேகலையாள் சுகமே போற்றி
சித்தத்தின் உள்ளுறையுந் தேவீ போற்றி
வீதியெழுந் தருளியெங்கள் விக்கி னங்கள்
வேரறுக்கும் மாதேவி போற்றி போற்றி
ஓதியெழும் ஊர்க்கெல்லாம் உதவுந் தெய்வம்
ஊரெழுமீ னாட்சியம்மை ஆடீர் ஊஞ்சல்

## வாழி

ஆரணங்கள் வாழ்கமறை யோர்கள் வாழ்க
ஆனினங்கள் வாழ்கதர்மம் அகிலம் வாழ்க
காரணமாம் மாரிவளங் கனிந்தே வாழ்க
கலைதிருசெங் கோலரசக் களிப்பே வாழ்க
பூரணமாம் அரன்வாழ்க புதல்வர் வாழ்க
போற்றுமரி அயன்வாழ்கப் புனிதர் வாழ்க
ஓரணங்காந் தெய்வத்தாய் உமையே வாழ்க
ஊரெழுமீ னாட்சியம்மை வாழ்க! வாழ்க!

## எச்சரிக்கை

முடியோர்மணித் திருவாலயர் முகில்வான் நிறைந்தொழுக
அடியார்தொழு தருளால்மலி அம்பாளெச்ச ரிக்கை
உருவோர்மயில் உணர்வேயுமை உனதின்னருள் பெறவே
வருவார்துயர்ச் கருவேரற வாழ்வாயெச்ச ரிக்கை
அருளேர்வடி வறிவேயொளி ரழகேயந்தி ராணித்
திருவேதவத் திறமாய்வருந் தேவீஎச்ச ரிக்கை
துணையாய்ப்பகல் இரவாயெமைத் தொடரும்மீ னாட்சி
புணையாய்வருந் திருமாலினிப் புவனீஎச்ச ரிக்கை

## பராக்கு

செங்குமுதத் தங்கவிதழ்த் திருவேபராக்கு
இங்கமுகப் பங்கயச்சீர்த் துணையேபராக்கு
தங்கிமிக இங்கிதங்கள் தருவாய்பராக்கு
திங்களணிந் தோன்மனையாந் தேவீபராக்கு

செந்தூரப் பொற்றிலகத் திகழ்வேபராக்கு
வந்தூரெம் பதித்தெய்வ வளமேபராக்கு
தந்தாரும் செந்தமிழின் தகவேபராக்கு
எந்தாயே மீனாட்சி எழிலேபராக்கு

## லாலி

தூண்டா மணிவிளக்கே தூமதியே லாலி - எம்மை
ஆண்டாள் மனோன்மணியாய் ஆனவளே லாலி
மலையேர் அரசாட்சி மாமகளே லாலி - தெய்வச்
சிலையே அலைமகளே சித்திரமே லாலி
பாரெழுந்த சக்திமலர்ப் பால்மதியே லாலி - எங்கள்
ஊரெழுவாழ் மீனாட்சி உற்பவமே லாலி

## மங்களம்

சீர்பூத்த சுந்தரிக்குச் சுபமங்களம் - எங்கள்
சிந்தைகுடி கொண்டவட்குச் சுபமங்களம்

மூவுலகும் ஆள்பவட்குச் சுபமங்களம் - தெய்வ
முத்தமென வந்தவட்குச் சுபமங்களம்

ஞானப்பால் தருந்தாய்க்குச் சுபமங்களம் - துய்ய
நாயகியாம் அம்பிகைக்குச் சுபமங்களம்

ஊரெழுமீ னாட்சிக்குச் சுபமங்களம் - எங்கள்
உடன்வாழும் தேவிக்குச் சுபமங்களம்

மங்களம் ! மங்களம் !! சுபமங்களம் !!!

சுபம்

# கதிரமலை வெளியீடு - 6

## வெளிவந்தவை :

1. வீரகத்தி விநாயகர் கீர்த்தனைகள்
   ( கவிஞர் க. வீரமணி )
2. வீரகத்தி விநாயகர் போற்றி மணிமாலை
   ( கதிரமலையான் )
3. மீனாட்சி திருவிருத்தம்
   ( கதிரமலையான் )
4. மனோன்மணி அந்தாதி
   ( கதிரமலையான் )
5. மதுரை மீனாட்சி திருவூஞ்சல்
   ( கதிரமலையான் )
6. ஊரெழு மீனாட்சி ஊஞ்சல்
   ( பண்டிதர் சங்கர குமரேசையா )

## வர இருப்பவை :

1. உலகெலாம் முருகன்
2. கனகி
3. அன்பே சிவம்
4. ஆசாபாசங்களம்
5. வேங்கையும் வேலனும்
6. தாமரை பூத்த தடாகத்திலே
7. கதிரமலையான் கவிதைக் கனிகள்

பிரிண்டிங், ரேப்பர் பிரிண்டிங், புத்தக வடிவமைத்தல் ;
தாய்க்குலம் : பிரிண்டிங் யூனிட்,
21. தக்கின்கான் பகதூர் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 5.